மதுரை சீடு இளைஞர்கள் வழங்கும்

# புதிய வெளிச்சங்கள்

தலைச்சுற்று இதழ்

"வெளிச்சத்தின் வேராய் விளங்குவோம்
புது உலகின் மாதிரியாய் திகழ்வோம்"

ஆகஸ்ட்-நவம்பர் 08 உலகு-1 வெளிச்சம்-2



## ஸ்ரீ அரவிந்தரின் நற்செய்தி

இளைஞர்களுக்கே உரியது எதிர்காலம். இளமையின் வளமை மிகுந்த புதிய உலகம் எழுச்சி பெறவிருக்கிறது. அதன் சிற்பிகளாக விளங்கத்தக்கவர் வாலிபர்களே. அதே போதில், உருவாக்க நாம் விரும்பும் இவ்வுலகம் சத்தியம், தீரம், நியாயம், உயர் ஆர்வம், நேர்மையான சுய பூர்த்தி இவைகளாலேயானது, எனவே, கோழைக்கும், தன்னலமே நாடுவோனுக்கும், எடுப்பாகத் தொடக்கம் செய்த பின்னர் நட்டாத்தில் நண்பர்களைக் கைவிடுவோனுக்கும் வருங்காலத்தில் இடமில்லை. தைரியசாலியும், ஒளிவுமறைவற்றவரும், நிஷ்களங்கமான ஹிருதயமுள்ளவரும், துணிச்சலானவரும், ஆர்வம் மிக்கவருமான இளைஞர்களின் அடிப்படையில்தான் தேசத்தின் எதிர்காலத்தை நன்றாக அமைக்கமுடியும்.

(ஆகஸ்ட்-15 இந்திய சுதந்திர தினம். ஸ்ரீ அரவிந்தர் பிறந்த தினம்)

---

அன்பு நெஞ்சங்களே!

புதிய வெளிச்சங்கள் இரண்டாவது காலாண்டு சிற்றிதழ், தங்கள் கரங்களில் தவழ்வதில் பெருமை அடைகின்றோம். எங்களின் சிற்றிதழ் முயற்சி, எங்களை நாங்களே பட்டை தீட்டிக் கொள்ளும் குழு முயற்சியாகும். தங்களின் பாராட்டும் விமர்சனமும் எங்களை உயர்த்தும். படித்து பயனுள்ள ஆலோசனைகளைத் தெரிவியுங்கள்.

இளைஞர்களுக்கு தாழ்மையான சில வேண்டுகோள்களை புதிய வெளிச்சங்கள் முன் வைக்கின்றது.

1. உணர்ச்சிப் பெருக்கில் தங்களிடம் வரும் மத, மொழி, சாதி, அரசியல் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாதீர். அறிவு, அறவழி செல்லும் சமூகம் படைக்கும் செயல்களை இளைஞர்கள் ஆற்றிட முன்வர வேண்டும்.
2. மதுரையில் சமூக நீதி கொண்ட கல்வி கிடைக்க அமைதியுடன் கூடிய கற்பதற்கான சூழல் அமைய பாடுபட வேண்டும்.

தோழமையுடன்
M. பெரியசாமி B.E.
புதிய வெளிச்சங்கள் ஆசிரியர் குழுவிற்காக

# இளைஞனே! விழித்துக்கொள்!



இளைஞனே! நீ விழித்துக் கொள்
உறங்கிக் கிடந்தது போதும்
பூமியை புரட்டிப் போடு.
வானத்தை மடக்கி உன் கையில் வை
வானவில்லை நேராக்கு.
கிரகங்கள் உனக்கு எட்டி விளையாடும் கால்பந்து
சிதறிக் கிடக்கும் விண்மீன்களை ஒன்றாக்கு.
சித்திரத்தைப் பேச வை, பலர்
சிந்திக்கும் நேரத்தில அதைச் செய்து முடி.
சிறகுகளை உனக்கு உண்டாக்கு.
பல நாடுகள் கவனத்தை உன் பக்கம் திருப்பு
உன் வாழ்க்கையை உலகுக்கு உதாரணம் ஆக்கு
உச்சி வானத்தில் எட்டிப் பற
நிலவில் கூடு கட்டு, சூரியனின் உஷ்ணம் வாங்கு
இருள் என்பதை உடனே போக்கு
இளைஞனே! உனக்கென ஓர் உலகத்தை
உருவாக்கு அங்கெல்லாம் இதை
நிலைநாட்டு

**S.முருகபாண்டி** B.A

---



# பண்பாடு மற்றும் கலாச்சாரத்திற்கான சாட்சி

நாட்டுப்புறக் கலைகள் மனித சமுதாயத்தின் ஒற்றுமை மற்றும் உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றியவை. இவை பெரும்பாலும் கிராம தெய்வங்களை சுற்றியே வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இவை அத்தெய்வங்களுக்கு விழா எடுக்கும்போது நிகழ்த்தப்படுவன. வருடத்திற்கு ஒருமுறை திருவிழா நடத்தினால், அத்தெய்வம் மனமகிழ்ச்சியோடு இருந்து நம் வாழ்வை சிறப்பாக்கும் என்பது நம்பிக்கை. அத்தெய்வங்கள் பெரும்பாலும் நம்முடைய முன்னோர்கள் என்று கூறப்படுகின்றன. தமிழ்நாட்டில் குலதெய்வ வழிபாட்டுமுறை பின்பற்றப்படுகிறது. பெரும்பாலும் தந்தை வழி தெய்வங்களே குலதெய்வமாக வழிபடப்படுகின்றன.

செவ்வியல் கலைகள், உயர்சாதி இந்துக்கள் மத்தியில் வரையறுக்கப்பட்டதாகவும், மரபு வழியிலும் உள்ளன. ஆனால், நாட்டுப்புறக் கலைகள் கிராம தெய்வங்களைப் பொறுத்து ஒரு வட்டத்திற்குள் அடங்காதவைகளாகவும், வரையறுக்கப் படாததாகவும், படைப்பாளியின் சுதந்திரத்திற்கு பரந்த இடம் கொடுக்கக்கூடியதாகவும் உள்ளன.

மேலும், நாட்டுப்புறக் கலைகள் வெற்றி, கோபம், போராட்ட குணம் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் உள்ளன.

ஒவ்வொரு ஊருக்கு ஊர் தெய்வங்களின் வழிபாடு, வழிபாட்டு முறைகள், கலைகள் முதலியன மாறுபடும்.

இன்று கிராமப்புறங்களில் பழமை மாறாது உயிர்த் துடிப்புடன் நடைபெற்று வரும் அய்யனார் மற்றும் கருப்பசாமி வழிபாடுகள் குலதெய்வ வழிபாட்டுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இத்தெய்வங்கள் சமண மற்றும் பௌத்த துறவிகள் என்று கூறுவோரும் உள்ளனர்.

கிராம தெய்வங்களுக்கு கோயில் கட்டட வரைமுறை, சிலைகள் வடிவமைப்பதில் வரைமுறை, ஆகம விதிகள் என்று எந்த கட்டுப்பாடும் கிடையாது. எனவே, அவை தொடர்பான கலைகளிலும் கட்டுப்பாடுகள் இல்லை.

இக்கலைகள் நமது பண்பாடு, கலாச்சாரத்திற்கான சாட்சிகளாகும். இவைகளை காப்பது நமது கடமைகளாககும்.

**R.கார்த்திக்** B.A

(சீடு – 10ஆம் ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி நடைபெற்ற நாட்டுப்புறக் கலைகள் குறித்த குழந்தைகளுக்கான மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரையின் சுருக்கம்.)

---

# பாரதியைப் படியுங்கள்

பாரதி நமக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டி. பாரதி 'கான்ஸியஸ்னஸ்' நமக்கு ஏற்பட வேண்டும். நமக்கு எவ்விதச் சந்தேகம் வந்தாலும், அது சமுதாயப் பிரச்சினையாலும் அல்லது வேறு எந்தப் பிரச்சினை வந்தாலும், பாரதியிடம் சொல்லுங்கள். அவன் அவற்றிற்கு தெளிவு தருவான். உறுதி தருவான். பாரதியின் பாடல்களை அவன் இயற்றியுள்ள கவிதைகளை நாம் துருவித் துருவிப் படிக்க வேண்டும். அவைகளை நாம் நம்முடைய குழந்தைகளுக்கும் மனப்பாடம் செய்து வைக்க வேண்டும். நமது செவிகளுக்கு அமுதூட்டும் முறையில், நெஞ்சிற்கு வீரமூட்டும் வகையில் பாரதி, பாடல்கள், கவிதைகள் இயற்றித் தந்திருக்கிறான். அவனது பாடல்களை, கவிதைகளை எல்லோரும் கற்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

பாரதியின் பாடல்களை, அவனது கவிதைகளை நாம் நாள்தோறும் படித்தால், அவன் நம்முடைய எந்த பிரச்சினைக்கும் நம்பிக்கை தருவான். தெம்பூட்டுவான். முன்னேறவழியும் செய்வான். மேலும் நமது சமுதாயம் வளரும்.

- அமரர். ஜீவா

''நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்''

''தருமத்தின் வாழ்வுதனைச் சூதுகவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்''

''மண் பயனுறவேண்டும்
வானகம் இங்கு தென்பட வேண்டும்''



''வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுறவாழ்வதற்கே''

''நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்க களியாட்டம்.

''ஒற்றுமைக்குள் உய்யவே
ஒரு பெரும் செயல் செய்வாய் வா வா வா''

''எல்லோரும் அமர நிலை
எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற்கு அளிக்கும்''

–மகாகவி பாரதி

(செப்டம்பர் 11. பாரதி நினைவுநாள். மகாகவிக்கு புதிய வெளிச்சங்களின் புகழ் அஞ்சலி)

# கல்லுக்குக் கீழே ஒரு பூச்சி

வில்லியன் கல்லன் பைரன். காதலர்கள் அதிகம் விரும்பும் உலகக் கவிஞன். ஓர் இலையுதிர் காலத்தில் விடுமுறையைக் கழிக்க வீட்டுக்கு வந்தான் பைரன். இந்த விடுமுறை முடிந்தால் அடுத்து யேல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்பு படிக்கலாம். பல்கலைக் கழகம் சென்று படிக்கவேண்டும் என்பது பைரனின் நீண்டகால கனவு.

ஒரு நாள் அவனுடைய அப்பா அவனை அழைத்தார்.
பைரன், அடுத்து என்ன செய்யறதா உத்தேசம்?
யேல் பல்கலைக் கழகத்துல படிச்சு பெரிய ஆளா ஆகப் போறேன்.
உனக்குப் படிக்கிறதுன்னா அத்தனை பிரியமா?
ஆமாம்.
இனி நீ படிக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.
ஏன்? ஏன் முடியாது?
நம்மகிட்ட அவ்வளவு வசதி இல்லை பைரன்.



அழுகை முட்டிக்கொண்டு வந்தது. அப்படியே திரும்பிப் பார்க்காமல் ஓடத் தொடங்கினான். வாழ்க்கையே முடிந்து போனது போல் இருந்தது பைரனுக்கு. எத்தனை எத்தனை கனவுக் கோட்டைகளைக் கட்டியிருந்தோம். எல்லாம் ஒரே நொடியில் சரிந்துவிட்டதே.

மரங்களுக்கு இடையே ஓடிக்கொண்டிருந்தான் பைரன். அந்தக் காட்டில் வேறு யாரும் இல்லை. தரையில் அமர்ந்துகொண்டு சத்தம் போட்டு அழத் தொடங்கினான்.

எழுந்து நின்றான்.

தன் காலுக்கு அருகே ஒரு சிறு கல்லை ஓங்கி எட்டி உதைத்தான். அதன் கீழே பாதுகாப்பாக ஒட்டியிருந்த ஒரு பூச்சி விர்ரென்று பறந்து போனது.

திடீரென்று அவன் மனதில் ஒரு பாடலின் வரி தோன்றியது.

மீண்டும் ஓடத் தொடங்கினான். இந்த முறைஉற்சாகத்துடன்.

மரங்களைச் சுற்றிச் சுற்றி ஓடினான். நீரோடைகள் வழியாக நடந்து சென்றான்.

ஹோ

இவனது குரலுக்குப் பல்வேறு பறவைகள் பல்வேறு விதமான ஒலிகளைப் பதிலுக்கு வழங்கின.

சத்தம் போட்டுக் கத்தினான் பைரன்.

பறவைகளே, இனி நான் கவிதை எழுதப் போகிறேன்.

இந்தக் கதையின் நீதி (படிக்க வசதியில்லாத யார் வேண்டுமானாலும் கவிதை எழுதலாம் என்பதல்ல.) படிப்பில் அவருக்கு இருந்த அந்தத் தீவிரமும், ஆர்வமும், ஈடுபாடும் அப்படியே கவிதைக்கு கன்வர்ட் ஆனதுதான் விஷயம். எதைச் செய்தாலும் முழு மனதுடன், எதைச் செய்தாலும் அதிகபட்ச உத்வேகத்துடன், எதைச் செய்தாலும் குறையாத ஆர்வத்துடன், தேர்ச்சியுடன், திறமையுடன் செய்யும்போது வெற்றி என்பது மிகச் சாதாரணமான விஷயமாகிறது.

---

## மதுரை சீடு
## இளைஞர் மேம்பாட்டு பணிகள்

### 1. தேடல்கள் அரங்கம்:

மதுரை சீடு அறக்கட்டளை நடத்தும் முழுமைத்துவக் கல்வி மையங்களில் தேடல்கள் அரங்கமும் ஒன்று. இதன் பொறுப்பாளராக S.கல்தான் அலாவுதீன் பணியாற்றி வருகின்றார்.

### 2. மதுரை சீடு இளைஞர் பேரவை (MSYF):

MSYF ஐந்து பெரும் குழுக்களாக இயங்கி வருகின்றது. மதுரை சீடு அறக்கட்டளையின் எளிதலைமைப்பில் இயங்கும் MSYF கல்லூரி செல்லும் இளைஞர்களையும், முழுநேரப் பணிக்குச் செல்லும் இளைஞர்களையும், பகுதி நேரம் படித்துக்கொண்டே பணிக்குச் செல்லும் இளைஞர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. 30 இளைஞர்கள் MSYF–ல் இணைந்துள்ளனர். சாதி, மத, இன பேதமின்றி கரும்பாலையை உயர்கல்வி கற்றோர் நிறைந்த பகுதியாக்கிட அயராது பாடுபட்டு வருகின்றனர்.

கரும்பாலையை இளைஞர்களின், குழந்தைகளின் கல்வி கனவுகளை நனவாக்கும் இடம், சீடு என்பதில் சந்தேகமில்லை. பேரவையின் பத்தாவது தலைவர்களாக R.கார்த்திக் மற்றும் M.அமுதா (2008) பொறுப்பேற்று சிறப்புற செயல்பட்டு வருகின்றனர்.

### 2.1 ஆசிரியர் தொண்டர் குழு:

மதுரை சீடு, சேவை செய்ய விரும்பும் தொண்டர்களை ஒருங்கிணைத்து கரும்பாலை, SM. நகர், P.T. காலனி, இந்திராநகர், பகுதி நலிவுற்றகுழந்தைகளின் கல்வி முன்னேற்றங்களுக்காக தினசரி மாலை 6 மணி முதல் 9.00 மணி வரை மாலை நேரக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றது.

ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், வணிக கணிதம் கணக்கு பதிவியல் போன்றபாடங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றன மொத்தம் 18 பேர், 250 குழந்தைகளுக்கு உதவி வருகின்றனர். இதன் பொறுப்பாளராக தொண்டர் M.மன்சூர்அலி சிறப்புறசெயல்பட்டு வருகின்றார்.

### 2.2 சிறப்புத் தொண்டர் குழு:

நடனம், நீச்சல், பாடல், ஓவியம், நாடகம், நூலக வாசிப்பு, கணினி, அறிவியல், நூலக நிர்வாகம், சேமிப்பு வழிமுறைகள், கைவினைப் பொருட்கள், குழந்தைத் திரைப்படம், சிற்றுலா, சுற்றுலா, ஆய்வு, ஆவண பாதுகாப்பு, விளையாட்டு, உடல்நலம் போன்றவைகளை குழந்தைகளுக்கு வழங்கிட ஏழு தொண்டர்களின் கூட்டு முயற்சியில், பொது விடுமுறைதினங்கள், திடீர் விடுமுறைகள், பள்ளித் தேர்வு விடுமுறைநாட்களில் சிறப்புத் தொண்டர் குழு பணி செய்கின்றது.

பயிற்சிகள், பட்டறைகள், கருத்தரங்குகள், விழாக்கள், களப்பணி, முகாம்கள் என பலவகைகளில் சிறப்புத் தொண்டர்கள் ஏழு பேர் தொண்டாற்றுகின்றனர்.

இதன் பொறுப்பாளராக திருமிகு A.S.கார்த்திக் பாரதி பணியாற்றி வருகின்றார்.

### 2.3 புதிய வெளிச்சங்கள் சிற்றிதழ்:

சீடு இளைஞர்கள் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் புதிய வெளிச்சங்கள் சிற்றிதழ் மதுரையில் உள்ள இளைஞர்களின் படைப்பார்வத்தைத் தங்களை தாங்களே பட்டை தீட்டிக் கொள்ள சிற்றிதழை வெளியிட்டு வருகின்றனர். புதிய வெளிச்சங்கள் சிற்றிதழுக்கு தொண்டர் எம். பெரியசாமி பொறுப்பாளராக உள்ளார்.

### 2.4 கலைக்குழு:

இளைஞர்களே இளைஞர்களுக்காக நடத்தும் சீடு கலைக்குழு நுண் மற்றும் நிகழ்கலை கற்பதையும், கற்பிப்பதையும், நிகழ்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இதன் பொறுப்பாளராக தொண்டர் S. முருகபாண்டியும், தொண்டர் P. முனியசாமியும் பணி செய்து வருகின்றனர்.

### 2.5 இளைஞர் வங்கி:

சீடு நற்பணிகள் செய்யும் தொண்டர்கள் தங்களின் பொருளாதாரத் தேவைகளுக்காக சிறுசிறு முயற்சிகளில் ஈடுபடும் குழுவே இளைஞர் வங்கி இதன் பொறுப்பாளராக O.மணிகண்டன் செயல்பட்டு வருகின்றார்.

### நிகழ்ந்தவை:

சீடு இளைஞர்கள் ஆற்றிவரும் பணிகளை புதுயுகம் குழந்தைகள் இதழின் பதிவுகள் பகுதியில் படித்து மகிழுங்கள்.

புதுயுகம், சீடு குழந்தைகளே குழந்தைகளுக்காக நடத்தும் இரு மாதங்களுக்கொருமுறை வெளிவரும் தளிர்சுற்று இதழாகும்

---

**சீடு தொண்டர் குழு**

| | | |
|---|---|---|
| S.முத்துக்குமார் M.A | G.விஜி B.E. | C.அருண்குமார் B.Sc., |
| A.S.கார்த்திக்பாரதி M.A. M.Phil | P.சரண்யா B.Sc. | R.பாஸ்கர் ராஜா B.Sc., |
| M.மன்சூர்அலி B.Sc., | M.அமுதா B.A. | M.மாரிமுத்து B.A. |
| K.அன்பரசன் M.S.W | R.கௌசல்யா B.Sc., | M.மருதுபாண்டி B.E. |
| O.மணிகண்டன் B.E. | D.பாலமுருகன் | M.சிவகுருநாதன் B.A. |
| P.முனியசாமி B.A. | R.கார்த்திக் B.A. | S.சுல்தான்அலாவுதீன் ITI |
| S.முருகபாண்டி B.A. | O.மோகன் B.A. | M.சுரேஷ்ராஜன் B.A. |
| M.பெரியசாமி B.E. | C.பிரேம்குமார் B.A. | N.ராம்குமார் B.A. |
| | K.அழகிரி B.A. | N.ராமச்சந்திரன் B.A. |

---


# MADURAI SEED

Support and Empower the underprivileged

Regd. No. 61/07, Arjun Shanmuga Illam
439/1, East Street, Karumbalai, Madurai-20.
Ph : 6456503, Cell : 9894805446, 9244556503
E-mail : mdu.seed1999@yahoo.co.in

சீடு இல்லந்தோறும் விழாக்கள்   விழா காணும் இனியோரை வாழ்த்தி மகிழ்கின்றோம்   வாழ்க வளமைகள் பெறுக

| நாள் | விழாவுக்குரியோர் | விழா | இடம் | சீடு – உடன் ஆன உறவு |
|---|---|---|---|---|
| 03.09.08 | மனுவேல் – மெர்லின் | மணவிழா | பெரியகுளம் | மணமகன் மனுவேல் 1999–2000ஆம் ஆண்டு சீடு தொண்டராகவும் கருத்தாளராகவும் விளங்கியவர் |
| 03.09.08 | A. அண்ணாத்துரை<br>K. கிருஷ்ணவேணி | மணவிழா | ஜராவதநல்லூர் | மணமகள் கிருஷ்ணவேணி – 17 ஆண்டுகளாக கார்த்திக் பாரதியின் மாணவியாக விளங்கியவர். சீடு தொண்டராகவும், சீடு–இன் முன்னாள் நிதி அறங்காவலராகவும் விளங்கியவர் |
| 04.09.08 | S. அசோக், M.உமாராணி | மணவிழா | அம்பர் பங்களா | மணமகள் உமாராணி கார்த்திக் பாரதியின் 1992–1999ம் ஆண்டு மாணவி – சீடு தொண்டர் பிரகாஷ் (1999–2000) அவர்களின் தங்கையாவார். |
| 4.09.08 | S. முனியாண்டி<br>S. பாண்டிமீனா | மணவிழா | ரெங்கநாதபுரம்.<br>வாடிப்பட்டி | மணமகள் பாண்டிமீனா சீடு–இன் இரண்டாண்டு மாணவி, தொண்டர் முருகபாண்டியின் மூத்த சகோதரியாவார். |
| 5.09.08 | E. சதீஸ்குமார் P. ஆனந்தி | மணவிழா | புதுச்சேரி | சீடு தொண்டர் சரண்யா, சீடு குழந்தைகள் சரவணக்குமார், கௌதம், ஆனந்த் இவர்களின் மூத்த சகோதரர் மணமகன் சதீஸ்குமார் ஆவார் |
| 5.09.08 | சீடு ஆசிரியத் தொண்டர்கள் | ஆசிரியர் தினவிழா | சீடு முழுமைத்துவக் கல்வி மையங்கள் | நலிவுற்றோர்க்கும் முழுமைத்துவ கல்வி என்ற கனவை நனவாக்க உழைக்கும் உள்ளங்கள் எங்கள் ஆசிரியர் தொண்டர்கள் ஆவர். |
| 11.09.08 | O. மோகன்<br>O. மணிகண்டன்.O. வீரபாண்டி | புதுமனைப் புகுவிழா | கரும்பாலை | சீடு தொண்டர்கள் மோகன், மணிகண்டன் இருவரும் சீடு–இன் 10 ஆண்டுகால உறுப்பினர்கள். வீரபாண்டி 5 ஆண்டுகாலமாணவர்ஆவார். |
| 22.09.08 | A.S. கார்த்திக் பாரதி | பிறந்த தினம் மற்றும் ASKB– யின் சமூக பணிகள் 17ஆம்ஆண்டு நிறைவு நாள் விழா | சீடு அரங்கங்கள் | A.S. கார்த்திக் பாரதி,<br>சீடு நிறுவுநர் மற்றும் அறங்காவலர் |